## வாக்களிப்பதன் அவசியம் குறித்து

# மெட்ரோ ரயில் நிலையத்தில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

■ சென்னை

கரோனா தடுப்பு மற்றும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி, மெட்ரோ ரயில் நிலையங்களிலும், மெட்ரோ ரயிலிலும் நடைபெறுகிறது.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரயில் நிறுவனம், பொதுமக்கள், பயணிகளுக்கு கரோனா பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதற்கிடையே, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' கலைக் குழுவினருடன் இணைந்து நடத்தும் மெல்லிசை கலை நிகழ்ச்சி விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை மெட்ரோ வரை மற்றும் சென்னை சென்ட்ரலில் இருந்து விமான நிலையம் மெட்ரோ ரயில் செல்லும் (கோயம்பேடு வழியாக) மெட்ரோ ரயிலில் இன்று மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையில் நடக்கிறது. இந்த நிகழ்வின்போது, வரும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இதேபோல் மெட்ரோ ரயில் நிறுவனம், நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இன்று மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையிலும், கிண்டி மெட்ரே ரயில் நிலையத்தில் நாளை (14-ம் தேதி) மாலை 6.30 முதல் இரவு 8.30 வரையிலும் பல்சுவை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியை சென்னை மாநகர பொதுமக்கள், மெட்ரோ ரயில் பயணிகள் நேரில் வந்து கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.